ISSN 2792-1026

ஆவது 32

# துளிர்க்கும் மொட்டுகள்

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

Scan QR Code

+94757000791 www.skytamilmedia.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் இதழ் - 32 28 ஒக்டோபர் 2023 @skytamil.lk

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd





கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவரை சந்தித்த ஸ்கை தமிழ் விருது குழு !




கத்தார் ஜெனீவா சர்வதேச மோட்டார் கண்காட்சி - 2023




அர்ஷிதா அமீர் எழுதிய வழி மாற்றும் மொழி நூல் வெளியீட்டு விழா



கத்தர் தமிழர் சங்கம் ஏற்பாடு செய்த "திறன் தேடல் 2023"

"புல்லட் ஓட்டும்போது தன்னம்பிக்கையா இருக்கும்!"
- ஸ்ரீ நந்தினி

## தென்னிந்திய பிரபல யூடியூபர் ஸ்ரீ நந்தினி அவர்களுடனான நேர்காணல்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதந்தோறும் | இதழ் - 32 | 28 ஒக்டோபர் 2023





கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவரை சந்தித்த ஸ்கை தமிழ் விருது குழு !

05 பக்கம்



06 பக்கம்

கத்தார் ஜெனீவா சர்வதேச மோட்டார் கண்காட்சி - 2023








கத்தார் தமிழர் சங்கம் ஏற்பாடு செய்த “திறன் தேடல் 2023”

07 பக்கம>



13 பக்கம்

அர்ஷிதா அமீர் எழுதிய வழி மாற்றும் மொழி நூல் வெளியீட்டு விழா







தென்னிந்திய பிரபல யூடியூபர் ஸ்ரீ நந்தினி அவர்களுடனான நேர்காணல்

32 பக்கம்

sky தமிழ் Media Network
Reg No: PV 00249082
ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්

Scan QR Code

**பணிப்பாளர்:**
ஜே.எம். பாஸித்

**முகாமையாளர்:**
அஸ்வர் ரிஸ்வி

**பிரதம ஆசிரியர்:**
ஷிஹானா நௌபர் - பலாங்கொடை

**இணையாசிரியர்:**
முனீரா வாஹித் - பதுளை
முஹம்மட் ஹாசில் - அநுராதபுரம்

**நிர்வாக குழு:**
ஆர்.எம்.சப்ராஸ் - புத்தளம்
தாரிக் முஹம்மத் - சம்மாந்துறை
குலசிங்கம் கிலசன் - கல்முனை
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
ஸகியா பாறுக் - சம்மாந்துறை
றொஸான் முஹம்மட் - சாய்ந்தமருது

**ஆசிரியர் குழு :**
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமென்) - கண்டி
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா – கொழும்பு
மஜினா உடமறு லெவ்வை – மாவடிப்பள்ளி
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
நிஹாசா நிசார் - கத்தார்
ஷீபா இப்றாஹீம் - மருதமுனை
றிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
ஜஸுரா ஜலீல் - மலேசியா
பாத்திமா சம்சுடீன் - சாய்ந்தமருது
அவ்ஷபா நாகூர்- ஏறாவூர்
பாத்திமா ஹகீமா அமீனுதீன் - ஓட்டமாவடி

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
றினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com
www.skytamilmedia.com



**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188



**ஷிஹானா நௌபர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94781069510

# ஆசிரியர் பக்கம்

நவீனம் வளர்ச்சி கண்டுள்ள இன்றைய காலகட்டத்தில் உலகம் பல்வேறு மாறுதல்களுடன் கூடிய துரித முன்னேற்றத்தின் பால் நகர்ந்துள்ளது. இந்த மாற்றங்களுடன் கூடிய மனித சமூகத்தில் நாளுக்கு நாள் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தொலை தொடர்பு சாதனங்களுடன் கூடிய பயன்பாடு அதிகரித்துள்ளது. உண்மையில் இவ்வளர்ச்சியானது காலத்திற்கு பொருத்தமான பல்வேறு தேவைகளையும் இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடியுமானதுமான ஒரு சாதனை என்றால் மிகையல்ல. ஆனால் அந்த சாதனையின் மறு புறத்தில் மனிதர்கள் பல்வேறு விதமாக தம்மை மாற்றிக் கொண்டுள்ளமை அவசர உலகில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

அந்த வகையில் வாசிப்பு என்பது இன்று பலரிடத்தும் அரிதாகிப் போயுள்ளமை நாம் அனைவரும் அறிந்ததே. வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்தும் அதேபோல அவனது முழு வாழ்வினையும் நெறிப்படுத்தும் என்பதனை அறியாததன் மற்றும் உணரப்படாததன் விளைவே இது. பொதுவாக முன்னைய கால அறிஞர்களாயினும் சரி , சாதனையாளர்களாக சமூகத்தில் வலம் வந்தவர்களாயினும் சரி தாங்கள் வாசிப்பிற்கு என்று தகுந்த இடத்தை வழங்கியதன் காரணமாகவே உலகம் போற்றும் மேதைகளாக அறியப்பட்டனர். அவர்கள் பலரால் சொல்லப்பட்ட கருத்துக்கள் எம் இதயங்களில் இன்றும் வாழ்கின்றன.

ஒரு சிறந்த புத்தக வாசிப்பு என்பது மனித சிந்தனையில் ஊடுருவி அவனிடத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் ஆற்றல்களையும் வெளிப்படுத்தி நிற்கும். மற்றும் கருத்தாழம்மிக்க சமூகத்திற்குப் பயனளிக்கக் கூடிய ஒரு மனிதனாய் அவனை சமூகத்தில் உயரச் செய்யும். ஆகவே தான் வாசிப்பின் முக்கியத்துவம் உணர்ந்து, பாடசாலை மாணவர்கள் மட்டுமின்றி பெற்றோர்கள், பெரியோர்கள் அனைவருமே வாசிப்பின் பால் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது எல்லா காலத்திலும் பயனளிக்கும்.

வீட்டுச் சூழலில் தங்களால் முடியுமான ஒரு சிறு வாசிகசாலையை ஏற்படுத்தல், வாசிப்பின் முக்கியத்துவம் பற்றிய கலந்துரையாடல்களை மேற்கொள்ளல், சிறந்த வளவாளர்கள் ஊடாக வாசிப்பின் நன்மையை உணரச் செய்தல், வாசிப்பால் முன்னேறியவர்களின் வரலாறுகளை படித்தல் என்பன வாசிப்புச் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கான களங்களாக அமையும். எனவே வாசிப்பு சமூகமொன்றை உருவாக்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை கூட்டாக இணைந்து செயற்படுத்துவதுடன் நாளைய நம் சந்ததியினரை நற்சிந்தனையாளர்களாக முன்னோக்கி நகர்த்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான அவசியமான காலகட்டத்தில் இருந்து வருகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා තානාපති කාර්යාලය - කටාර්
இலங்கை தூதரகம் - கத்தார்
Embassy of Sri Lanka - Qatar



# கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவரை சந்தித்த ஸ்கை தமிழ் விருது குழு !

கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீன் அவர்களை, 2023 ஸ்கை தமிழ் விருது குழு, 15.10.2023 கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதரகத்தில் சந்தித்தது.

தூதரக சிரேஷ்ட அதிகாரி ரஷீத் எம். பியாஸ் (நளீமி), ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித், ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி, தொழிலதிபர், சமூக செயற்பாட்டாளர் யாழினி குமார், என்.சி. நிகழ்வு திட்டமிடல் நிறுவனத்தின் பணிப்பளார் நிர்மலா சண்முகபாண்டியன் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் (நவம்பர்) 30ஆம் திகதி இந்திய கலாசார மையம் அசோகா மண்டபத்தில் நடைபெறவுள்ள ஸ்கை தமிழ் விருது விழாவிற்கு பிரதம அதிதியாக கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீன் அவர்களை அழைப்பதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பில் விருது விழா சம்பந்தமாக சில ஆலோசனைகளையும் தூதுவர் வழங்கியிருந்தார். இன, மத வேறுபாடின்றி அனைவரையும் இணைத்துக் கொண்டு இதனைச் செயல்படுத்த வேண்டும் என்பதை அவர் அவ்விடத்தில் வலியுறுத்திக் கூறினார்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 32 | 28 ஒக்டோபர் 2023




# கத்தாரில் நடைபெற்ற ஜெனீவா சர்வதேச மோட்டார் கண்காட்சி 2023

கத்தார் சுற்றுலாத்துறை நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஜெனீவா சர்வதேச மோட்டார் கண்காட்சி (GIMS) கத்தாரின் முதல் பதிப்பானது திறந்து வைக்கப்பட்டது.

10 நாட்களில் சுமார் 50 நாடுகளில் இருந்து 1,000 ற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களும் 180,000 பார்வையாளர்களும் பங்கேற்றனர். ஜெனீவா சர்வதேச மோட்டார் கண்காட்சியானது 1905 இல் ஆரம்பிக்கபட்டத்திலிருந்து இக்கண்காட்சியானது முதல் முறையாக சுவிட்சர்லாந்திற்கு வெளியே நடைபெற்றது. தோஹா கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் (DECC), கொண்டாடப்பட்ட மோட்டார் கண்காட்சியானது அக்டோபர் 5 முதல் 14 வரை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**“இந் நிகழ்வில் ஸ்கை தமிழ் ஊடகத்தின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்கை தமிழ் ஊடகத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.”**



கத்தார் ஏர்வேஸ் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி HE Akbar al-Baker உடன் ஜெனீவா சர்வதேச மோட்டார் கண்காட்சியில் எடுத்துகொண்ட புகைப்படம்.







# கத்தார் தமிழர் சங்கம் ஏற்பாடு செய்த "திறன் தேடல் 2023"

3 வயது முதல் 18 வயது வரை பல்வேறு தனித் திறமைகளைக் கண்டறிந்து கௌரவிப்பதற்காக கத்தார் தமிழர் சங்கம் ஏற்பாடு செய்த "திறன் தேடல் 2023" வெள்ளிக்கிழமை 29 செப்டம்பர் ஒருங்கிணைந்த இந்திய சமூக மையம் (ஐ.சி.சி) நடைபெற்றது.







# கத்தார் வாழ் கல்முனை ஸஹிரியன்ஸ் ஏற்பாட்டில் பேட்மிண்டன் சுற்றுப்போட்டி -2023

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் கத்தார் கிளையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற 'ஸஹிரியன்ஸ் பேட்மிண்டன்' சுற்றுப்போட்டியின் சாம்பியனாக Shuttle Hunder அணி தனதாக்கிக் கொண்டது. கத்தார் வாழ் கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர்கள் கத்தார் கிளை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த ஆண்கள் இரட்டையர் பேட்மிண்டன் போட்டி (சீசன்1) Zahirians Badminon Premier League – 2023 (Season -1) கத்தார் ஆல்பா கேம்பிரிட்ஜ் பாடசாலையின் உள்ளக விளையாட்டு அரங்கில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் கத்தார் கிளையின் தலைவர் முகம்மட் பாயிஸ் ஆதம்பாவா தலைமையில் நடைபெற்றது.




# ChatGPT என்பது என்ன? கூகுளையும் அழித்துவிடுமா?

முஹமட் ஹாசில்
(ஊடகவியலாளர், துணை ஆசிரியர் - துணிந்தெழு சஞ்சிகை, செய்தி ஆசிரியர் ஸ்கை தமிழ் செய்திகள்)

கத்தாரில் நடந்த உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிகளில் அனைவரது கவனமும் குவிந்திருந்த நேரத்தில், கடந்த நவம்பர் 30ஆம் திகதி செயற்கை நுண்ணறிவுத் துறையின் அடுத்த கட்ட புரட்சியாகக் கருதப்படும் ஒரு புதிய குழந்தை சட்ஜிபிடி (ChatGPT) பிறந்தது.

சட்ஜிபிடி (ChatGPT) என்பது OpenAI ஆல் உருவாக்கப்பட்ட ஒரு சக்திவாய்ந்த மொழி மாதிரியாகும். இது மனிதனைப் போன்ற உரையை உருவாக்கும் திறன் கொண்டது. சட்ஜிபிடி தன்னை பற்றி இவ்வாறுதான் வர்ணிக்கின்றது. சட்ஜிபிடி (ChatGPT) யை யார் வேண்டுமானாலும் இலவசமாக கணக்கை உருவாக்கி Chat GPT யை பயன்படுத்த முடியும்.

2020 இன் இறுதியில் எலோன் மஸ்க்கின் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட AI Chatbot மென்பொருளை பயன்படுத்தி நீங்கள் எதனை வேண்டுமென்றாலும் எழுதலாம். உண்மையானது அல்லது தவறானது எதை வேண்டுமென்றாலும் எழுதலாம். எடுத்துக்காட்டாக, சிக்கன் கறி தயாரிப்பது எப்படி என்று உங்களுக்குக் கற்பிக்க முடியும். உங்களுக்கு வேலை பெறுவது, கவிதை எழுதுவது, கல்விக்கான கட்டுரைகள் மற்றும் நீண்ட நாட்களாக நீங்கள் தொடர்பில் இல்லாத ஒரு நண்பருக்குச் சமரசக் கடிதம் எழுதுவது போன்றவற்றைப் பற்றிய ஆலோசனைகளையும் இது வழங்க முடியும். அதுமட்டுமல்ல சுவையான கவிதை எழுதச் சொன்னால் எழுதித் தரும். உங்களுக்கு Love Letter எழுதித்தரச் சொன்னால் அதனையும்

ChatGPT எழுதித்தரும். இவை எல்லாம் ஒரு நொடியில் நடந்துவிடும். சில குறைகள் இருக்கலாம். ஆனால் இது நிச்சயமாக உங்களுக்கு வியப்பைத் தரும்.

அதாவது Search engine optimization எனப்படும் SEO.ai வழங்கும் தகவல்கள் படி, சுமார் 100 மொழிகளில் சாட்ஜிபிடி (ChatGPT) கிடைக்கிறது. ஆங்கிலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படும் இதன் திறன் மற்ற மொழிகளைப் பொருத்து மாறுபடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ஜிபிடி (ChatGPT) உருவான ஐந்து நாட்களிலேயே 10 லட்சம் பயனாளர்களைத் சென்றடைந்தது. இந்தக் கருத்துப் பரிமாற்றங்கள் இந்த மாதிரியான பயிற்சிக்கும் மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்போதைக்கு 'சோதனை மற்றும் ஆய்வு' காலத்தில் இது அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கும் என்று ஒபன் ஏஐ நிறுவனம் தெரிவித்துள்ளது. இது, எதிர்காலத்தில் இதன் மூலம் வருமானம் ஈட்டும் வழிகளை ஆய்வு செய்ய நிபுணர்களுக்கு உதவும். இந்தக் கால கட்டத்தில் இது தவறான தகவலைத் தர வாய்ப்புள்ளது என்றும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

சட்ஜிபிடி (ChatGPT) இவ்வளவு Advanced இருப்பதால் கூகுளை அழித்துவிடுமா? கூகுளை பயன்படுத்துபவர்கள் சட்ஜிபிடி (ChatGPT) க்கு மாறிவிடுவார்களா? என்று கேட்டால் தற்போதைக்கு அது சாத்தியமில்லை. சட்ஜிபிடி(ChatGPT) யிடம் இருப்பது 2021இற்கு முற்பட்ட தரவுகளே. அதற்கு பின்னரான தரவுகள் சட்ஜிபிடி (ChatGPT) யிடம் இல்லை என ஒபன் ஏஐ நிறுவனம் தெரிவித்துள்ளது.

கூகுளில் ஒரு விடயத்தை தேடினால் இந்த நொடி வரை உள்ள தரவுகளை வைத்து காட்சிப்படுத்தும். அதே போல ChatGPT என்பது ஒரே ஒரு AI. ஒரேயொரு AI சொல்வதை சரியென்று எடுத்துக்கொள்ள முடியாது. இதனை வைத்து உலகளவில் தவறான கருத்துக்களையும் பரப்ப முடியும். கூகுளாக இருந்தால் உலகில் பல்வேறு வலைத்தளங்களையும் முடிவுகளாக வரிசைப்படுத்தும். அங்கே வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள பல மனிதர்களினதும் கருத்துக்களை நம்மால் உள்வாங்கக்கூடியதாக இருக்கும்.

இதேவேளை ChatGPT இன் அறிமுகம் மனிதர்களுடைய வேலைவாய்ப்புக்கள் பறிபோகும் என்ற கருத்துக்களும் இணையத்தில் உலாவருகின்றன. ஒவ்வொரு தொழினுட்பமும் அறிமுகம் செய்யும் போதும் மனிதர்களுடைய வேலை பறிபோகும் என்ற கருத்து நிலவுவது வழமையானதுதான்.

எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழினுட்பத்தினால் நிறைய வேலைவாய்ப்புக்கள் இழக்கப்படும் என்பது உண்மை. அதே நேரம் பல புதிய வேலைகளும் உருவாகலாம்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புதிய தொழினுட்பங்கள் உருவாகிக்கொண்டும் அவை வளர்ந்துகொண்டும்தான் இருக்கும். நாம் புதிய தொழினுட்பங்களுக்கேற்ப நம்மை நாமே தகவலமைத்துக்கொண்டு அவற்றுடன் இணைந்து வாழ வேண்டும்.



# மாதரைத் தாக்கிடும் மார்பகப் புற்றுநோய்

**கிண்ணியா சபீனா**
உதவி அதிபர் -
அல் /ஹிறா ம. மகா வித்தியாலயம்
கிண்ணியா

தொற்றாநோய்கள் எம்மைத் துரத்திக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்திலே அதிலொன்றான, புற்றுநோயானது, மிகவும் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றது என்றால் மிகையாகாது !

மனிதனின் உடலில் எந்த உறுப்பிலும் புற்று நோய் ஏற்படலாம்! நூற்றுக்கு மேற்பட்ட வகையான புற்று நோய்கள் மனிதனைத் தாக்குகின்றன. ஆரம்ப நிலையில் இந்நோய் கண்டுபிடிக்கப்பட்டால் முற்றாகக் குணப்படுத்த முடியும் எனக் கூறப்படுகின்றது!

அந்த வகையில் மாதர்களைத் தாக்கி, இன்னுயிரைக் குடிக்கும் பயங்கர நோயான மார்பகப் புற்றுநோய் பற்றிச் சிறிது அறிந்து கொள்வோம்.

பொதுவாக உடலிலுள்ள உயிரணுக்கள் இயல்பாகவே பிரிந்து வளர்ந்து உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும், முதிர்ந்த கலங்கள் வெளியேறும், இந்த (regulation) ஒருங்கமைவு இன்றி, வித்தியாசமாக உயிரணுப் பெருக்கம் ஏற்படும் பொழுது புற்றுநோய் உண்டாவதாகக் கூறப்படுகின்றது! மரபணுப் பிறழ்வுகளாலும் உயிரணுப் பெருக்கம் ஏற்படலாம் எனவும் அறியக் கிடைக்கின்றது!

அந்தவகையில், பெண்களை அதிகம் தாக்கும் மார்பகப் புற்றுநோய் (Breast Cancer) பெரும்பாலும் பால் சுரப்பு நாளங்களில், அல்லது அந்தக் குழாய்களுக்குப் பாலைக் கொண்டு சேர்க்கும் நுண்ணறைகளில் தோன்றலாம். அங்கு கலங்கள் பெருக்கமடைந்து கட்டிகள் உருவாகலாம். இக்கட்டிகள் காலப்போக்கில் ஏனைய இழையங்களிலும் பரவி, மற்ற உறுப்புக்களையும் தாக்கலாம்.

இம் மார்பகப் புற்றுநோயானது உலக அளவில் 12% ஆன பெண்களைப் பாதிக்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்நோய் ஏற்பட்டாலும் 80-90% குணமாகி விடுகின்றன. ஆனால் வறிய நாடுகளில் உயிர் பிழைக்கும் விகிதம் மோசமாக உள்ளது!

இக்கொடிய நோய் பின்வருவோருக்கு ஏற்படலாம் என்று கூறப்படுகிறது,

***குழந்தைக்குத் தாய்ப் பாலூட்டாத பெண்கள்.**
***குழந்தைப் பேறில்லாதவர்கள்.**
***வாய்வழியாகக் கருத்தடை மாத்திரை பத்து வருடங்களுக்கு மேல் பயன்படுத்துவோர்**
***55 வயதுக்குப் பின்னர் மாதவிடாய் நின்றவர்கள்**
***35 வயதுக்குப் பின்னர் முதல் குழந்தை பெற்றவர்கள்.**
***மிக இள வயதில் பூப்படைந்தவர்கள்.**
***மாதவிடாய்ச் சுழற்சியில் ஸ்திரத்தன்மை அற்றவர்கள்.**
***அதிகமாகக் கதிர்வீச்சுச் சிகிச்சைக்கு உட்பட்டவர்கள்.**
***மாதவிடாய் நிறுத்த ஹோர்மோன் சிகிச்சை செய்கின்றவர்கள்,**
***இரத்த உறவுகளில் புற்றுநோய் கண்டவர்கள்.**
***மார்பகங்களில் கட்டிகள், மற்றும் அசாதாரண மாற்றங்கள் காணப்பட்டாலும் கவனிக்காமல் விடுவோர்!**

போன்ற தன்மைகள் மிகைக்கும் போது இக்கொடிய நோய் ஏற்படுகிறது. மற்றும் தவறான வாழ்க்கைக் கோலமும் மார்பகப் புற்று நோய்க்குக் காரணமாகலாம் என்பதும்




உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது:
**1) மது அருந்துதல் புகை பிடித்தல்.**
**2) கொழுப்பு மிகுந்த உணவுகளை அதிகம் உண்ணுதல்.**
**3) போதியளவு உடற்பயிற்சி இன்மையும் உடற்பருமனும்.**
**4) மரக்கறி பழங்கள் நாருணவுகள் உட்கொள்ளாமை.**
**5) உடன் உணவுகளை அதிகம் உண்ணுதல்.**
**6) நிறமூட்டப்பட்ட உணவுகள், சுட்ட உணவுகள்,மரபணு மாற்றப்பட்ட உணவுகளை உண்ணுதல்.**

போன்ற காரணங்களும் புற்று நோயை

ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது. ஆகவே நாம் இவ்வாறான வாழ்க்கைக் கோலத்தில் இருந்து எம்மையும் சந்ததியையும் விலக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். மேலும், இந்நோய்க்கான குணங்குறிகளையும் நாம் அறிந்துகொள்வது அவசியமாகும். மார்பகங்களில் வீக்கம் அல்லது கட்டிகள் தோன்றுதல்!

**மார்பகங்களில் தோல் சிவந்து போதல், தோடம்பழத்தோலின் அமைப்பைப் பெறல், மார்பகத் தசைகள் அல்லது முலைக்காம்புகள் உட்குழிவாதல், மார்பகத்திலிருந்து திரவங்கள், மற்றும் இரத்தம் போன்றன வெளிவருதல், அசாதாரண வலி ஏற்படல் திடீரென நிறை குறைதல், முதுகுவலி கைவலி, போன்றவற்றுடன் சுயபரிசோதனையின் போது கட்டிகள் தென்படல், தசை கல்போல் இருத்தல், உருச் சிறுத்துக் காணப்படல், போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரைச் சந்திக்க வேண்டும்.**

நோய்நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள பின்வரும் பரிசோதனைகள் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது!

மார்பக சுய பரிசோதனை, மெமோகிறாம், MRI ஸ்கேன், பயோப்ஸி (செல்கள்) எடுத்துப் பரிசோதித்தல், ஆரம்பநிலையில் நோய் கண்டறிவதால் குணப்படுத்துவது இலகு என்பார்கள்!

**பின்வரும் சிகிச்சைகள் அளிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றன**


***அறுவைச்சிகிச்சை.**
***கீமோதெரபி.**
***கதிர் வீச்சுச் சிகிச்சை..**
***ஒமோன் சிகிச்சை.**


மூன்றாம் நான்காம் நிலையில் உள்ளவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதன் மூலம் வாழும் காலத்தை கொஞ்சம் கூட்டிக் கொள்ளலாம் எனப்படுகின்றது. சிகிச்சைக்குக் கொடுக்கப்படும் ஊசி மூலமான மருந்து உடலில் வளர்ச்சியடையும் புதிய கலங்களை அழிக்கும். அப்போது துரிதமாக வளரும் நல்ல கலங்களும் அழியும் அதனால் தான் தலைமயிர் கொட்டி விடுவதாகக் கூறப் படுகிறது.

**மேலும் புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கச் சில வகை உணவுகள் உதவுவதாகவும் கூறப்படுகின்றது.**
**அவை :**
***விதையுடன் திராட்சை**
***சித்திரசுப் பழங்கள்**
***தக்காளி**
***பூண்டு, பட்டை**
***கரட், பீன்ஸ் மஞ்சள்**
***மீன்கள், பசளி நட்ஸ்வகை**

கண்மணிகளான எமது பெண்மணிகள் மார்பகப் புற்று நோயிலிருந்து தங்களைப் பாதுக்காக்க விழிப்புணர்வுடன் வாழ்க்கைக் கோலத்தினை அமைத்துக் கொள்ள முயற்சித்தல் அவசியமாகும்.

இறைவன் எமக்கு அருளாகத் தந்த பொன்னுடலையும் இன்னுயிரையும் இயன்றவரை காப்போம்! எமது சந்ததியினரையும் இக்கொடிய நோயில் இருந்து பாதுகாப்போம்!



# காவத்தமுனை அர்ஷிதா அமீரின்
## "வழி மாற்றும் மொழி" நூல் வெளியீட்டு நிகழ்வு

அர்ஷிதா அமீர் எழுதிய வழி மாற்றும் மொழி நூல் வெளியீட்டு நிகழ்வு 2023/10/12 ஆம் திகதி Zoom தொழில்நுட்பம் வாயிலாக இடம்பெற்றது. ஆர் ஜே இன்ஷாப் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

நிகழ்வுகளின் ஆரம்ப கட்டமாக கிராத் இடம் பெற்றது அதனை பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையின் மாணவன் எம். இஸட். எம்.ஆதிஃப் வழங்கி வைத்தார். துணிந்தெழு சஞ்சிகை ஆசிரியர் குழு உறுப்பினர் சகோதரி ஷாமென் நிஸாம்டீன் புத்தக வெளியீட்டில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார். நூலாசிரியரின் அறிமுகத்துடன் நூல் வெளியீடு இடம் பெற்றது.

கௌரவ அதிதயாக கலந்து சிறப்பித்த CGC Talk Shop நிருவனர் ரினூஷா நௌஷாட் உரை நிகழ்த்தியதை தொடர்ந்து, ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஷிஹானா நௌபர் அவர்களினால் நூலிற்கான நயவுரை வழங்கப்பட்டது.

நிகழ்வின் பிரதம அதிதி பன்முக ஆளுமை, இலக்கிய விமர்சகர் கலாபூஷணம், கவிஞர் ஏரூர் கவிக்கோ ஏ. சீ அப்துர் ரஹ்மான் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். .



நிகழ்வின் கதாநாயகி அர்ஷிதா அமீரின் உரையை தொடர்ந்து நேயர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இறுதியாக, துணிந்தெழு சஞ்சிகையின் இணை ஆசிரியர் முஹம்மது ஹாசில் நன்றியுரை நிகழ்த்த நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றது. அத்துடன் கௌரவ அதிதியாக ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் பணிப்பாளர் ஜே எம் பாசித் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

இந்த புத்தகமானது மூதூர் JMI நிறுவனத்தினால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.



# கத்தார் எழுமின் அமைப்பின் 41வது மாதாந்த கூட்டம்




உலகெங்கிலும் உள்ள தமிழ் தொழில்முனைவோர், தொழில் வல்லுநர்கள், துறைசார்ந்தவர்களை ஒன்றிணைத்து இயங்கும் எழுமின் அமைப்பின் 41 வது மாதாந்த கூட்டம் கத்தாரில் (25) நடைப்பெற்றது.

கத்தார் எழுமின் அமைப்பின் தலைவர் சக்திவேல் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற மாதாந்த கூட்டத்திற்கு பிரதம அதிதியாக சேது பொறியியல் கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் எஸ்.முகம்மது ஜலீல் மற்றும் விசேட அதிதியாக நேச்சுரல்ஸ் பியூட்டி அகாடமியின் வணிக வளர்ச்சிப் பிரிவின் முதன்மை செயல் அதிகாரி டி. சாக்கோசென் மத்தாய் கலந்து கொண்டார். மேலும் இதன் போது கத்தாரில் பல நிறுவனங்களில் இருந்து தொழில் முனைவோர் மற்றும் திறனாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

எழுமின் அமைப்பானது நாற்பது நாடுகளில் தமிழ் தொழில் முனைவோர், தொழில்வல்லுநர்கள், துறை சார்ந்தவர்களை ஒன்றிணைத்து இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உலக தமிழ்த் தொழில்முனைவோர் திறனாளர்கள் ஒன்றினையும் மாநாடு இந்த வருடம் நவம்பர் 24– 26வரை ஓமான் நாட்டில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# வலிகளும் வெற்றியாகும்

என் கனவுகள் ஆயிரம் இருந்தாலும் அவற்றை அழிக்கும் துரோகங்கள் பல கோடி நிகழாமலும் இல்லை; இருந்தும் என் பயணம் தொடராமலும் இல்லை- என் கனவுகளை நோக்கி!!

என்னைத் தீண்டிய அத்தனை வலிகளும் என்னை ஊக்குவித்துக் கொண்டே இருந்தன- கற்றலின் மூலம் பெறும் வெற்றியை விட வலிகளுடன் கூடிய அனுபவம் மூலம் பெறும் சாதனையாகிய வெற்றிக்கு
பலம் அதிகம் என்பதை!!!

இவ்வெற்றி மீதான அலாதி மோகம்; வாழ்க்கை மீதான அளவு கடந்த நம்பிக்கை, பழக்கிவிடும் எம்மை -கடந்து செல்வதற்கு, வலிகள் நிறைந்த அத்தனை சோதனைகளையும்
தாண்டி வெற்றி பெறுவதற்கு!!


**கலீல் றஹ்மான் ஹஸ்ஸானா பேகம்**
தள்கஹவெவ ( அநுராதபுரம் )



# மௌனமான நேரங்கள்

புதிய தென்றல்
றிஸ்வானா ஜெய்னுலாப்தீன்
மடவளை - கண்டி

மௌனம் அழகானது
தேவையின்றி பேசாத போது/
மௌனம் ஆபத்தானது
தேவைக்கும் பேசாத போது/

மௌனம் அறிவானது
முட்டாள்களோடு வாதிடாதப் போது/
மௌனம் கோழையானது/
தவறுகளைத் தட்டிக் கேட்காதப் போது/

மௌனம் அற்பமானது
சொல்ல வந்த உணர்வை அடக்கிடும் போது/
மௌனம் அற்புதமானது
கண்களால் கதைப் பேசிடும் போது/

மௌனம் சுமையானது/
தேவையானவர்களோடு பேசாதப் போது/
மௌனம் வலி நிறைந்தது
தேவையானவர்கள் பேசாத போது/

மௌனம் எரிச்சல் ஊட்டுவது
தேவையான இடத்தில் பேசாத போது/

மௌனம் சந்தேகமானது
துரோகி முகம் பார்த்து
புன்னகைக்கும் போது/

மௌனம் பயங்கரமானது
எதிரி சாந்தமாக இருக்கும் போது/
மௌனம் அகங்காரமானது
அடுத்தவர்களைப் பாராட்டாத போது/

மௌனம் ஆடம்பரமானது
வெற்றிக் களிப்பில் திளைத்திடும் போது/
மௌனம் சுகமானது
கற்பனையில் கவி எழுதிடும் போது/

மௌனம் அருள் நிறைந்தது
இறைவனுடன் தனிமையில்
உரையாடிடும் போது//




# தன் சமூகத்தின் உரிமைக் குரலாய் மலையகத்திலிருந்து வளர்ந்து வரும் எழுத்தாளர் கவிஞர் மு.அனுஷன்

தொடர்ந்தும் நூல் விமர்சனங்கள் மற்றும் நூல் அறிமுகங்கள் பக்கத்தின் ஊடாக பல்வேறுபட்ட நூல்களின் அறிமுகங்களையும் வாசகர்களின் அனுபவ பகிர்வுகளையும் பிரசுரம் செய்வதில் பெருமிதம் கொள்கிறோம்.

தொடரும் இப்பயணத்தில் இந்த மாத இதழில் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் நூலாசிரியர் பற்றியும் அவரது நூல்கள் பற்றியுமான அறிமுகத்தை தருகிறோம்....

இலங்கையின் வனப்பில் எழில் கொஞ்சும் மலையகத்தின் பங்கு இன்றியமையாதது. இன்றைக்கு சுமார் 200 வருட வரலாற்றைக் கொண்ட மலையகம் வாழ் மக்களின் இன்று வரையிலும் தீர்க்கப்படாத சமூக பிரச்சனைகளை தன் கவி வரிகளால் உலகரியச் செய்ய வேண்டும் எனும் இலக்கோடு மலையகச் சமூகத்திலிருந்து துளிர் விட்டு இன்று இலக்கிய உலகில் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொண்டவர் கவிஞர் மு.அனுஷன். மலையகத்தின் சாமிமலை சின்ன சோளங்கந்தை தோட்டத்தில் தேயிலை தோட்ட தொழிலாளியான முருகதாஸ், லலிதா தம்பதிகளின் மகனாக பிறந்து தன் கல்வியை மஸ்கெலியா புளும்பீல்ட் தமிழ் மகா வித்யாலயத்தில் ( தேசிய பாடசாலை) நிறைவு செய்துள்ள இவர் தன் பாடசாலை காலம் முதலே தனக்கு கிடைத்த இலக்கியத் துறைசார் வாய்ப்புக்களின் ஊடாக தன் சமூகத்தின் உரிமை குரலாக ஒலித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தன் பாடசாலைக் காலத்தில் கிடைத்த இலக்கிய



துறை சார் வாய்ப்பை பயன்படுத்தி தன் இலக்கிய ஆக்கங்களை படைத்து தமிழ் மொழி தினப் போட்டிகள் அடங்கலாக பல்வேறு இலக்கிய போட்டிகளில் வெற்றிகளை சுவீகரித்துள்ளதோடு இறுதியாக 2019 ம் ஆண்டு இடம்பெற்ற தேசிய இலக்கிய விழாவில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான குறுநாடகம் ஆக்க போட்டியில் மனிதம் எங்கே என்ற தலைப்பில் அமைந்த குறுநாடகம் முதலாமிடம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரின் முதல் இலக்கிய படைப்பு கடந்தோடும் நொடிகள் என்ற தலைப்பில் அமைந்த நாடகத் தொகுப்பாகும். இத் தொகுப்பில் இடம்பெற்ற குறும் நாடகங்கள் தேசிய இலக்கிய விழாவில் முதலாமிடம் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந் நூலின் ஊடாக மலையக சமூக பின்னணியில் எதிர்கொள்கின்ற தொழில் மற்றும் வறுமை சார் பிரச்சனைகள் , தேயிலை தோட்டங்களில் பணி புரியும் உறவுகள் எதிர் நோக்குகின்ற இயற்கை இன்னல்கள் முதலானவற்றையும் அதனோடு இணைந்ததாக இளந் தலைமுறையினரது உயிர் பறிக்கும் வீண் விபத்துக்கள், மற்றும் இதன் பின்னரான குடும்ப உறவுகளின் பரிதவிப்பு மேலும் 2020ம் ஆண்டுகளில் பேசு பொருளாக அமைந்த ஏப்ரல் தாக்குதல் மற்றும் இத் தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளின் குடும்ப பின்னணி எதிர்நோக்குகின்ற இன்னல்கள் முதலானவற்றை உலகறிய வெளிக்கொண்டு வரும் நோக்கில் அமைந்த மூன்று குறும் நாடகங்களை "தேனீ...ர்", "நினைவலைகள்", "அலட்சியம்" ஆகிய சுவாரஸ்ய தலைப்புக்களில் கொண்டமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இத் தொகுப்பானது 2020ம் ஆண்டு அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ."நாட்டிற்கு பெருமதியான நூல் ஒன்று" செயற்திட்டத்தில் பங்கு கொண்டிருந்ததோடு பின்னர் புளூம்பீல்ட் தேசிய பாடசாலையால் வெளியிடப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை கல்வியின் பின்னரும் தொடர்ச்சியாக மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் உரிமைக்காக தன் கவி வரிகளை பட்டைத் தீட்டிய கவிஞர் மு.அனுஷன் 2021 ம் ஆண்டு தன் 20வது வயதில் இரண்டாவது இலக்கிய படைப்பை மலையக உறவுகளுக்கு சமர்பித்து அவர்களது நீங்கா துயர், உரிமை மறுப்பு, சொந்த வீடோ நிலமோ இல்லாமை, தமது தொழிலுக்கேற்ற ஊதியம் கிடைக்காமை மற்றும் இன்றும் அடிமைப்பட்டு வாழும் இவ் உறவுகளின் சமூக பின்னணி முதலானவற்றை தன் கவிதைகளின் கருப்பொருளாக கொண்ட

நெடுங்கவிதைகளின் தொகுப்பை "மலைக் குருவியின் ஆதங்கம்" எனும் பொதுமைப்பாடான தலைப்பில் வெளியிட்டு மலையக சமூகத்தவரது உரிமைக்காக குரல் கொடுத்திருந்தார் என்பது அடையாளப்படுத்தப்பட வேண்டியதாகும்.

இக் கவிதை நூல் மலையகத்தில் மட்டுமின்றி தமிழ் பேசும் பெரும்பாலான உறவுகள் இடத்திலும் பெறும் வரவேற்பை பெற்றதோடு மலையக அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரச சார் நிறுவனங்கள் கொண்டு சேர்க்கப்பட்டு உரிமை குரலாய் இன்று வரையிலும் பேசப்பட்டு வருகின்றமை நாம் அறிந்ததே. 2021ம் ஆண்டு வெளிவந்த இந் நூல் வாசகர்களின் அமோக ஆதரவால் இரண்டாம் பதிப்புக்கும் தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறை கவிஞர் மு.அனுஷனின் நெடுங்கவிதைகளின் தொகுப்பாக ஆகஸ்ட் மாதம் வெளிவந்த "சிறகிருந்தால்...!" எனும் தலைப்பில் அமைந்த கவிதை இலக்கியம் இலங்கையில் பல்வேறு சமூக பின்னணியில் வாழும் தமிழ் மற்றும் மொழி கடந்த நம் சகோதர உறவுகள் எதிர் நோக்குகின்ற பெரும்பாலான துயரங்களையும் சமூக பிரச்சனைகளையும் உலகறியச் செய்யும் நோக்கில் உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதே.

குறிப்பாக மலையக சமூகத்தவரது துயர்களோடு மீனவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார பிரச்சனைகள், பராமரிப்பிழந்த முதுமை சமூகத்தின் துயர் நிலை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இன்று வரையிலும் மீளாத் துயரில் வாடும் உறவுகளின் நிலை முதலானவற்றோடு ஒட்டுமொத்த தமிழ் மற்றும் சகோதர சமூகங்களும் ஆங்காங்கே எதிர்நோக்கும் பெரும்பாலான துயரங்களையும் சமூக பிரச்சனைகளையும் சுமந்து உரிமை குரல் எழுப்பும் எண்ணப்பாட்டில் வெளிவந்துள்ளமையானது இந் நூலின் சிறப்பாகும்.

பெரும் எதிர்பார்ப்போடும் நம் இலங்கை வாழ் அத்தனை சமூகத்தினதும் பெரும் உரிமைக் குரலாக வெளிவந்துள்ள இந் நூல் மலையகத்தின் மூத்த எழுத்தாளர் சாகித்திய ரத்னா மு.சிவலிங்கம் ஐயா அவர்களின் தலைமையில் ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி காலை 11 மணியளவில் புளூம்பீல்ட் தேசிய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.


இவ்வாறு தன் இளம் வயதிலேயே இலக்கியத் துறைசார் ஆர்வம் கொண்டு தொடர்ச்சியாக மலையக உறவுகள் மற்றும் உலக தமிழ் மற்றும் சகோதர சமூகங்களின் உரிமைக் குரலாக தன் எழுத்துக்களையும் கவி வரிகளையும் ஆயுதமாக்கி தன் இலக்கிய படைப்புக்களை வெளியிட்டு மலையக மண்ணிலிருந்து வளர்ந்து வரும் கவிஞர் மு.அனுஷன் அவர்களை இம் மாத துணிந்தெழு சஞ்சிகையின் வளர்ந்து வரும் ஆளுமைகளின் அறிமுகம் பகுதியில் அறிமுகம் செய்வதில் மனம் மகிழ்கிறது துணிந்தெழு சஞ்சிகை நிர்வாகம்.




துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 32 | 28 ஒக்டோபர் 2023


## எங்கள் பள்ளிக்கூடம்




ஷிஹானா நௌபர் B.Sc. in Psychology UG (IOU) துணிந்தெழு - இணை ஆசிரியர்




# அல் ஹிக்மா மஹா வித்தியாலயத்தின் அறிமுகம்

**"கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்."**

அந்தவகையில் அன்றிலிருந்து இன்று வரை பல எண்ணிலடங்கா முயற்சிகளையும் சாதனைகளையும் நிலை நிறுத்தி வருகின்ற இயற்கை எழில் கொண்ட கிராமத்து பாடசாலையின் அறிமுகமே இது.

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் கம்பளை எனும் ஊரில் அல் ஹிக்மா மஹா வித்தியாலயம் அமைந்து மாணவர்களின் எதிர்காலத்தை வளமாக்கி வருகிறது. இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக M.H.M நுஃமான் அவர்கள் கடமையாற்றி வருகிறார்.

இன்று சுமார் 75 வருடங்களுக்கு முன் ஆண்டியாகடவத்தை மஹா வித்தியாலயம் என்ற பெயரில் 1942 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் முதன் முதலில் தலைமை ஆசிரியராக பணியாற்றியவர் M.A ஹாபில் , முதல் மாணவன் A.C.M சலீம். குறிப்பிட்ட 119





மாணவர்களையும் 4 ஆசிரியர்களையும் கொண்டு பழைய மஸ்ஜித் கட்டிடத்தில் இயங்கியது. வெள்ளப்பெருக்கு மற்றும் மாணவர் தொகை அதிகரிப்பால் ஏற்பட்ட இடப்பற்றாக்குறை காரணமாக நலன்விரும்பிகள் சிலரால் கொள்வனவு செய்யப்பட்டு " கண்டாக்கு தோட்டம் " எனும் இடத்தில் 100 அடி நீளமான முதலாவது கட்டிடம் கட்டப்பட்டது. இது 03.05.1965 ல் உத்தியோக பூர்வமாக இடமாற்றப்பட்டது. மேற்படி இடத்தில் பாடசாலை கட்டிடங்கள், விளையாட்டு மைதானம் என்பன படிப்படியாக விருத்தியடையத் தொடங்கியது.

சுமார் 3 ஏக்கர் 1 ரூட் 10 பேர்ச்சஸ் உள்ள இவ்விடத்தில் ஒரு மைதானமும் அமைத்தது குறிப்பிடத்தக்கதாகும். இம் மைதானத்தில் அஸீஸ், மசூர், மஹ்மூத் என மாணவர்கள் இல்லங்களாக பிரிக்கப்பட்டு இல்ல விளையாட்டு போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

1970 ம் ஆண்டு வட்டார பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டிகளில் பல்வேறு சாதனைகளை இப்பாடசாலை புரிந்துள்ளது. ஆண்டியாகடவத்தை முஸ்லிம் வித்தியாலயம் அல் ஹிக்மா மஹா வித்தியாலயமாக பெயர் மாற்றப்பட்டு தரம் உயர்த்தப்பட்டது. மாணவர்களின் எதிர்கால நலனை கருத்திற் கொண்டு க.பொ.த உயர்தர கலை பிரிவு வகுப்புகள் 2006 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலையின் பெயரை "அல் ஹிக்மா " என மாற்றுவதிலும் பாடசாலையின் தற்போதைய இலட்சினையை உருவாக்குவதிலும் பாடசாலை கீதத்தை இயற்றியதிலும் ஆசிரியராக கடமையாற்றிய அஷ்ஷெய்க் M.S ரியாஸ் முஹம்மத் (நளிமீ) முக்கிய பங்காற்றினார்.

உயர்கல்வி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து இன்று வரை பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கும் கல்வியியற் கல்லூரிகளுக்கும் சென்று அரச தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோல் இவ்வருடமும் உயர் தர மாணவர்கள் நூறு வீத பெறுபேறுகளைப் பெற்றுள்ளதோடு ஒரு மாணவி 3A சித்திகளை பெற்றுள்ளதாவது வரலாற்று நிகழ்வாகும். தற்போது 300 ற்கும் மேற்பட்ட மாணவர்களையும் 25 ற்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும்கொண்டு இயங்கி வருகிறது. சமூக விஞ்ஞான போட்டிகள், மீலாத் போட்டிகள், தமிழ் தின போட்டிகள் மற்றும் கலாசார (கோலாட்டம்) போட்டிகளில் பங்கு பற்றி வலய மட்டங்களில் இடங்களை பெற்றுள்ளது. மேலும் பாடசாலை முன்னேற்றத்திற்காக பல திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது.







# மல்லர் கம்பம்

**சித்திரவேல் அழகேஸ்வரன்**
(கணித ஆசிரியர் –
புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு – 10.)

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ் குடி என்று பேரானந்தத்துடன் மார்தட்டிக்கொண்டிருக்கின்றோம். உலகுக்கு கல்வியையும் கலைகளையும் கலாச்சாரத்தையும் முதன் முதலாய் வழங்கிய பெருமையையும் தமிழர்களுக்கே உரித்தாகும். பலவிதமான கலைகள் தமிழ் வரலாற்றில் வளர்க்கப்பட்டுள்ளன. ஆயகலைகள் அறுபத்து நான்கு உண்டு. அவை அனைத்துமே உடலுக்கும் உளத்துக்கும் உறதியை வழங்குபவையாகவே உள்ளன. அவற்றில் சில மறைந்து செல்கின்றன.


அவற்றில் ஒன்றாக தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான மல்லர் கம்பம் எனும் வீரக்கலையும் அமைகின்றது. 'மல்' என்றால் 'வளம்' என்று தமிழுக்கு இலக்கணம் வகுத்துக்கூறியுள்ள தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பபட்டுள்ளது. 'மல்லர்' என்றால் வீரம் மிகுந்த போர்க்குணமுள்ளவர்கள் என்று அர்த்தம். முன்னைய காலத்தில் போர் பயிற்சிக்காக மேற்கொண்ட ஒருவகையான உடற்பயிற்சி முறையாக மல்லர் கம்பம் விளங்கியது. மனிதனைப் போன்று மரத்தினாலோ அல்லது கல்லினாலோ உருவம் அமைத்து பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மல்லர் கம்பம் பயிற்சியினால் உடல் வலிமை பெறுவதோடு மனம் ஒருமுகப்படுத்தப்படுகின்றது. ஆதி மனிதன் மரம் ஏறி இறங்குவதற்காக கையாண்ட வழிமுறைகளைக் கொண்டே இக்கலை



உருவாக்கப்பட்டுள்ளது. 11ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் கங்கை கொண்ட சோழபுரத்தில் போர் வீரர்கள் இப்பயிற்சியில் ஈடுபட்டு தமது உடல் வலிமையை மெருகேற்றியுள்ளார்கள். இக்கலையிலிருந்தே வழுக்கு மரம் ஏறும் விளையாட்டுப் போட்டியும் தோன்றியுள்ளது. மல்யுத்தம், கராத்தே, குத்துச்சண்டை போன்ற தற்காப்புக் கலைகளுக்கெல்லாம் தந்தையாக மல்லர் கம்பம் விளங்குகின்றது. பதஞ்சலி முனிவரால் பாரிக்கு கற்றுக்கொடுத்த யோகக் கலையும் மல்லர் கம்பம் எனும் இக்கலையில் உள்ளடங்கப்பட்டுள்ளது.

'விசையுறு பந்தினைப்போல் உள்ளம் வேண்டியபடி செல்லும் உடல் கேட்டேன் நசையுறு மனங்கேட்டேன் - நித்தம் நவமெனச் சுடர்தரும் உயிர் கேட்டேன்...' என இறைவனிடம் வரம் கேட்ட மகாகவி பாரதியாரைப்போல் யோகக் கலையிடம் வரம் கேட்போருக்கு இவை அனைத்தும் கிடைக்கும் என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல் மல்லர் கம்பம் பயிற்சியில் ஈடுபட்டோருக்கும் இவ்வரங்கள் கிடைக்கும் என்பது மெய்யே. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பர். மனிதனுக்கு உடல், உளம் என்பவற்றின் ஆரோக்கியம் என்பது மிகமிக முக்கியமானதாகும்.

உடலையும் உள்ளத்தையும் நன்னிலையில் பேணுவதற்கு இந்த மல்லர் கம்பம் கலை பெரிதும் உதவி செய்கிறது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். உடம்பு தெம்பாக இருந்தால்தான் எதையும் வெற்றிகரமாக முடிக்கலாம். உடலோ உளமோ வலியால் வாடும்போது அதற்கான தீர்வினை மிக விரைவாக அடைந்துவிடவேண்டும். இல்லையேல் அது பாரதூரமான விளைவுகளுக்கு எடுத்துச்செல்லும். 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தனிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்று பொய்யமொழிப் புலவர் திருக்குறளில் மொழிந்துள்ளார். அதாவது ஒருவர் உடலில் உள்ள நோயைக் குணப்படுத்த வேண்டுமாயின், அது என்ன நோய் என்பதையும் எங்கிருந்து எப்படி உடலுக்குள் உருவானது என்பதையும் ஆராய்ந்து அறிந்து, அந்த நோயை குணப்படுத்தக்கூடிய முறையான



வைத்தியரிடம் அணுகி தவறில்லாமல் முறையான மருத்துவத்தை பெறவேண்டும் என்கிறார்.

'வெள்ளம் வரும் முன் அணைகட்ட வேண்டும்' என்பது பழமொழி. எனவே நோய் ஏற்பட்ட பின் வைத்தியம் காண்பதை விட நோய் வராமல் காத்துக்கொள்வதே சிறந்தது. அவ்வாறு மனித உடம்மையும் மனத்தையும் கலங்க விடாது காக்கும் சக்தி மல்லர் கம்பக் கலைக்கு உண்டு. உடலுக்கு நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்வதோடு ஞாபகச்சக்தியையும் அதிகரிக்கச் செய்கிறது.

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்' என மகாகவியின் முழக்கத்திற்கு ஏற்ப பிறமொழிக் கலைகள் பல நம் தமிழ்க்கலைகளுடன் கலந்துவிட்ட போதிலும் நமது தமிழ் பாரம்பரியக் கலைகள் பல அருகி வருவது வேதனையை தருகிறது. மல்லர் கம்பம் இக்கலையை தமிழர்கள் மறந்து வரும் இக்காலத்தில் மகாராஷ்டிரம் எனும் பிரதேசத்தைச் சேர்ந்த அவ்வின மக்கள் ஜுன் மாதம் 15ம் திகதியை 'மல்லாக்கம் தினம்' என கொண்டாடி வருகின்றனர்.
பொழுதுபோக்கிற்காக, வீரத்திற்காக, மருத்துவத்திற்காக, உடலுறுதிக்காக, மனதை ஒருநிலைப்படுத்துவதற்காக, சாகச விளையாட்டிற்காக என பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட மல்லர் கம்பம் எனும் தமிழ்க் கலையானது தமிழர்களிடையே மீண்டும் பரவி வரவேண்டும். பல இளைஞர்கள் இக்கலையை கற்று சாதனைகள் புரியவேண்டும் என தமிழனாக ஆசைப்படுகின்றேன்.









# முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் மூன்றாவது தேசிய மாநாடு காத்தான்குடியில்

**ஷாமென் நிஸாம்டீன்**
(உபதலைவி SLPC & துணிந்தெழு சஞ்சிகை ஆசிரியர் குழு உறுப்பினர்)

குடும்பம் எமது விழி ஆற்றல் எமது வழி என்ற தொனிப் பொருளில் ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான Sri Lanka Pen Club அமைப்பின் மூன்றாவது தேசிய மாநாடு அக்டோபர் மாதம் 21 ஆம் திகதி காத்தான்குடி சிஐஜி மண்டபத்தில் அதன் ஸ்தாபகரும் இலக்கிய வித்தகருமான ஆசிரியை திருமதி மஸூறா சுஹூறுத்தீன் Jp தலைமையில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. இம்முறை முதன்மை அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் றமீஸ் அப்துல்லாஹ் அவர்களும் மற்றும் விஷேட அதிதிகளாக பேராதனை வளாக ஓய்வு நிலை பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் மற்றும் காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி றிப்கா ஷஃபீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக காரைதீவு கோட்டக் கல்வி பணிப்பாளர் திரு. பைந்தமிழ்க் குமரன் ஜே. டேவிட் , மட்டக்களப்பு உதவி கல்விப் பணிப்பாளர் திரு முருகு தயாநந்தன், விடிவெள்ளி பிரதம ஆசிரியர் ஜனாப் எம். பி. எம். பைரூஸ், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகவியளாளரும் எமது போஷகருமான கலாநிதி மஷ்ரூபா முகமது மஜீத், மின்னல் வெளியீட்டுப் பணிப்பாளரும் நாவல் ஆசிரியருமான கவிஞர் அஸீஸ் எம். பாயிஸ் மற்றும் முன்னாள் மாநகரசபை உறுப்பினரும் இஸ்லாமிய இலக்கிய கழக தலைவருமான ரீ.எல்.ஜவ்பர்கான் அவதானி மீடியா பணிப்பாளர் கவிஞர் மதியன்பன் மஜீத், மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள்.



இம்முறை இம் மாநாடு மூன்று கட்டங்களாக நடைபெற்றன. முதல் கட்டமாக காலை 9 மணிதொடக்கம் 10.00 வரை Pen club உறுப்பினர்களின் ஒன்று கூடலுடன் களை கட்டியது. புதிய உறுப்பினர்களின் அறிமுகம், பாடல்கள் அதன் பின்பு ஒன்றரை லட்ச ரூபாய் ஐபோனும் ஒன்பதாயிரம் ரூபாய் மேக்கப் கிட்டும் என்ற தலைப்பில் காத்தான்குடி உறுப்பினர்களால் சமூகத்திற்கு நல்லதொரு படிப்பினை யூட்டும் சமூக நாடகத்தை மேடை ஏற்றி சபை மகிழ்விக்கப்பட்டது. நாடகப் பிரதியை காத்தான்குடி ஜெஸ்மின் ரமீஸ் சகோதரி பிரதி ஆக்கம் செய்து நெறிப்படுத்தியிருந்தார். அத்தோடு காலை சிற்றுண்டி அனைவருக்கும் பரிமாறப்பட்டது.

இரண்டாவது அமர்வு திட்டமிட்டபடி காலை 10:30 ற்கு சரியாக ஆரம்பமானது. முதலில் கிராத் எமது அமைப்பின் உறுப்பினரான சப்ரா இல்முத்தீன் அவர்களால் ஓதப்பட்டு அதன் தமிழாக்கத்தை எமது அமைப்பின் ருஷ்தா சிறாஜ் வழங்கினார். அடுத்து எமது சமூகத்தின் மூன்றாவது பள்ளிவாயலான மஸ்ஜிதுல் அக்ஸாவிற்காகவும் எமது பாலஸ்தீன மக்கள் படும் இன்னல்களுக்கு நல்லதோர் தீர்வு வேண்டும் என்ற நோக்கில் இரண்டு நிமிடம் மௌனமான இறைப் பிரார்த்தனை நடந்தது.

அடுத்து எமது கழக கீதத்தை உபசெயலாளர் முப்லிஹாவுடன் ஜெஸ்மின் ரமீஸ் சேர்ந்து வழங்கினார். அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை காத்தான்குடி முன்னாள் மாநகர சபை உறுப்பினரும் எமது அமைப்பின் அங்கத்து வருமான பஹ்மியா ஷரீப் நிகழ்த்தினார். அடுத்து தலைமை உரையை எமது ஸ்தாபகர் வழங்கினார். அதில் எமது வாட்ஸ் அப் குழுமத்தில் நடைபெறும் 24 நிகழ்ச்சிகளை பற்றிய விடயங்களையும் எமது குழு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்களைப் பற்றிய விடயங்களையும் வழங்கினார். அடுத்ததாக எமது வாட்ஸ்அப் பணிப்பாளரும் கண்டி பதியுதீன் மகளிர் பாடசாலையின் முன்னாள் உப அதிபரும் அண்மையில் கலாபூஷணம் விருது பெற்றவருமான அரஃபா




மன்சூர் நானும் Pen club உம் என்ற தலைப்பில் உரையாற்றினார். அதில் தான் எப்படி இக்குழுவில் இணைந்து கொண்டதையும் ஆளுமைகளையும் பற்றி பகிர்ந்து கொண்டார். அடுத்து எமது குழுவின் போஷகர்களில் ஒருவரும் மின்னல் பதிப்பகத்தின் பணிப்பாளருமான அஸீஸ் எம் பாயிஸ் எமது குழுவின் ஆற்றல்களையும் செயற்பாடுகளையும் குறிப்பிட்டு பாராட்டினார்.

இலக்கிய மாநாட்டில் கவிதைகள் இல்லாமல் எப்படி சிறப்பிக்கும்.. அந்த வகையில் எமது உறுப்பினர்களில் ஐவர் கவிதைகளை நகைச்சுவையாகவும் காத்திரமாகவும் வழங்கி சபையோரை மகிழ்வித்தனர். இதற்கு எமது ஸ்தாபகர் தலைமை தாங்கினார்.

அடுத்து காரைதீவு கோட்டக்கல்வி பணிப்பாளர் பைந்தமிழ் குமரன் ஜி டேவிட் தனது சிறப்புரையில், பேனா முனையில் எமது பெண்கள் சாதனை படைப்பதை வாழ்த்தியதோடு மட்டுமல்ல அவர்களின் ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள பல ஆலோசனைகளையும் வழங்கினார்.

அடுத்து எமது குழுமத்தில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளின் பரிசளிப்பு இடம்பெற்றது. சிறுகதை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு எமது சிறப்பு விருந்தினரான ஓய்வு நிலை பேராசிரியர் எம் எஸ் என் அனஸ் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார். அடுத்து கவிதை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் கௌரவ அதிதிகளில் ஒருவரான பைந்தமிழ் குமரன் ஜே டேவிட் வழங்கினார். அடுத்து ரமழான் வினா விடை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் மட்டக்களப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகு தயானந்தன் வழங்கினார். அடுத்து ரமழான் தேடல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார். கலாநிதி மஷ்ரூபா மஜித் அவர்களும் அடுத்து Sri Lanka Pen Club சிறந்த செயற்பாட்டாளர்களுக்கான விருதுகளை விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம் பி எம் பைரோஸ் அவர்கள் வழங்கினார். அடுத்து எமது போஷகர்களில் ஒருவரும் நாடறிந்த எழுத்தாளருமான நியூசிலாந்தைச் சேர்ந்த மறீனா இல்யாஸ் ஷாஃபி அவர்களால் எமது கவிதாயினிகளின் 22 கவிதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட இமயம் தழுவும் இறக்கைகள் என்ற நூல் வெளியீடு நடைபெற்றது.

மதியநேர இடைவேளைக்கு பிறகு மூன்றாம்



கட்ட நிகழ்ச்சிகள் சரியாக பகல் 2 மணிக்கு ஆரம்பமாகியது. அதில் கிளப்பின் தோற்றமும் அதன் வளர்ச்சி பாதைகள் அதன் செயல்பாடுகளை பற்றிய காணொளியை SLPC யின் உபதலைவி ஷாமென் அவர்களால் தயாரித்து அரங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

அடுத்து எமது விஷேட அதிதி பேராதனை வளாக ஒய்வு நிலை பேராசிரியர் எம் எஸ் எம் அனஸ் அவர்களால் எமது மூன்று வெளியீடுகளுக்குமான கருத்துரை வழங்கப்பட்டது. அவருடைய உரையில் எமது கவிதைகளை சிலாகித்தது மாத்திரமல்ல எம்மை வளர்த்துக் கொள்ள சில உத்திகளையும் பெண்களின் முன்னேற்றம் எவ்வளவு முக்கியமானது என்பது பற்றியும் எமது அமைப்பு பற்றிய சமூகத்தினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் என்ற விடயத்தையும் தனதுரையில் குறிப்பிட்டார் .

அடுத்து எமது உறுப்பினர்களுக்கு 2023 இன் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து எமது முதன்மை அதிதியாக கலந்துக் கொண்ட சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, அவருடைய உரையில் இலங்கை பெண் கவிஞர்களின் பங்களிப்பையும் அத்தோடு எமது Pen club கவிதாயினிகளின் கவிதைகள் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்ற விடயத்தையும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் உறுப்பினர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அத்தோடு ஸ்தாபகர் மஸூறா சுஹூறுத்தீன் உறுப்பினர் மஹிஷா பானுவால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அடுத்து மட்டக்களப்பு கல்வி பணிப்பாளர் திரு முருகு தயானந்தன் தனது உரையில் எமது ஆளுமைகளையும் எமது குழுவில் செயல்பாடுகளையும் பாராட்டி உலகளாவிய ரீதியில் அது வியாபிக்க வேண்டும் என்று வாழ்த்தினார். அடுத்து எமது அமைப்பின் சார்பாக நிர்வாக குழு உறுப்பினரான லைலா அக்ஷயா வாழ்த்துக்களை தெரிவித்தார். இறுதியாக நன்றியுரையை எமது உபசெயலாளர் முப்லிகா பாடல் மூலம் தெரியப்படுத்தினார்.

நிகழ்ச்சி இனிதே மாலை 4:30 மணியளவில் நிறைவு பெற்றது. இந்நிகழ்வினை உப தலைவி ஷாமென் நிஸாம்டீனுடன் செயலாளர் என். எம்.ஆரிபா தொகுத்து வழங்கினார்கள். அவதானி மீடியா இந்நிகழ்வினை நேரடி ஒளிபரப்பு செய்தது. இவ்வருட மாநாட்டினை செயற்படுத்துவதற்கு அமைப்பின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் அனைவரும் பெரிதும் ஒத்துழைத்தனர்.

இது ஒரு வாட்ஸ்ஆப் குழுவாக இருந்தாலும்கூட மட்டக்களப்பு பண்பாட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக உள்ளது அதன் சிறப்பம்சமாகும்.

sky தமிழ்

# AWARDS QATAR

## -2023-

கத்தாரில் வரலாறு
படைத்துக் கொண்டிருக்கும்
ஆளுமைகளுக்கான விருது விழா

**DATE : 30TH NOVEMBER 2023**
**VENUE : Ashoka Hall ,**
**Indian Cultural Center – Doha**

### Platinum Sponsor

ALZAMAN EXCHANGE W.L.L

### Gold Sponsors

Exodus International

aspa Consulting | Auditing | Tax

Tandoora King

### Event Partner

nc EVENTS

### Silver Sponsor

Q CARGO

### Printing Sponsor

ADDON it QATAR

### Print Media Partner :

தினகரன்

தினகரன் வாரமஞ்சரி

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 32 | 28 ஒக்டோபர் 2023



# கருகும் மொட்டுக்கள்

பஸ்லா பர்ஸான்
காத்தான்குடி, இலங்கை

பஞ்சாய் மென்மையான அருமைப்
பிஞ்சுகளை//
நஞ்சாய் வன்மையுடைய கொடுமை
நெஞ்சத்தவர்கள்//
வதைக்கும் பழி வன்செயல் பார்த்து//
பதைக்கும் விழிகள் கண்ணீரைக் கோர்த்து//

இதயத்தைப் பிழிந்து இரத்தம்
வழியச்செய்யும்//
இரக்க குணமற்ற அரக்கர் மனப்பையும்//
கருங்கல்லாய் ஆகியே காரிருள் சூழுதே//
கொடுங்கோலாய் மாறியே பாரினில் தாழுதே//

போதையின் வன்மம் மதமாய்த் தலைக்கேறி//
போனதால் பெண்சிசுவும் சேதமாய்
உலையாகி//
மானமும் ஊனமாய்த் தீட்டுடன் வதைபட்டு//
கானக ஊனுண்ணிகள் வேட்டையில்
பதைக்கிறதே//

பத்து மாதத் தவத்தின் பரிசாய்//
செத்துப் பிறந்து தருவித்த சிசுவை//
சொற்ப நொடிச் சிற்றின்ப வெறியில்//
அற்ப சுகம் பெற்றிடப் பறிக்கையில்//

பெற்ற வயிறும் பற்றி எரியுதே//
பற்றுக் கொண்ட சிசுவும் கருகுதே//
தீயாய் சிந்தை வெந்து பதறுதே//
தாய்தந்தை உள்ளம் வெடித்துச் சிதறுதே//

இதழ்விரித்துப் பரப்பிடும் மலர்கள்
வாடையை//
பதம்பார்த்து மொட்டிலே கருக்கிடும்
காடையர்//
செகத்தினில் வாழ்வது சாபக் கேடே//
இகத்தினில் வீழ்த்தி வீசட்டும் நாடே//

வேண்டாம் விசமூறும் நாசச் செயல்களே//
மாண்டே போகட்டும் பாவப் புயல்களே//
துளிர்க்கட்டும் அன்பும் இதமான தென்றலாய்//
அளிக்கட்டும் இன்பம் நிதமும் திங்களாய்//



# வீடெல்லாம் விலையேறி வில்லங்கம்

விலையேற்றி விலையேற்றி
வில்லங்கத்துயரேற்றி
வலைவீசி விலைவாசி மலைபோல
வலியேற்றி
நிலைமாறி நலிவாகி நடைபிணமாய்ப்
பலியேற்றி
நிலுவையிலே கடனாகி கவலையிலே
கலி கண்ணீர்!

மின்சார அலகு விலை கூட்டி சடுதியாய்
சம்சாரம் பலிக்கவைத்து பகிடியாய்
பன்சாரம் பல உயர்ந்தும் பலசரக்கு
விலையுயர்த்தி
தன்சாரம் தனையிழந்து மின்சாரக்
கட்டணமா?

நீர்வழங்கல் சபை நிலுவை நீடித்த
பணமூட்டை
நீர்நிலைகள் நற்கிணற்றில் நன்னீர்
கொடை வேட்டை
தண்ணீர் தருவோமென்று தாலாட்டி
வாலாட்ட
தண்ணீர்க் கிணறுகளை தலைகீழாய்
மூடிவிட்டார்!

நீர்வழங்கல் அலகு விலையேற்றி இலகு
விலை சாட்டி
நீர்வழங்கல் நாள் நிலையாய்
நன்னீர் விலை கூட்டி
நாருரித்து நட்டாற்றில் விட்டீரோ
விலையேற்றி?
நாமருந்தும் நீருக்கா நாளெல்லாம் போர்
செய்வோம்!

**எம்.சி.ஹாஜரா உம்மா**
நற்பிட்டிமுனை.



# பிரபல யூடியூபர் ஸ்ரீ நந்தினி அவர்களுடனான நேர்காணல்

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகத்தை தாருங்கள்.**

என்னுடைய பெயர் ஸ்ரீ நந்தினி. என்னுடைய தந்தை கண்ணபிரான் அவர் ஒரு லாரி டிரைவர். தாய் வெங்கடேஸ்வரி அவர் ஒரு இல்லத்தரசி. எனக்கு இரண்டு உடன்பிறப்புகள் பிரியதர்ஷினி மற்றும் ஜான்சி இருவரும் தரம் பத்தில் கல்வி கற்கின்றனர்.

**02) உங்களுடைய கல்லூரி வாழ்க்கை பற்றி பகிர்ந்து கொள்ளுங்கள்.**

நான் BE Mechanical Engineering படித்து முடித்துள்ளேன். கணினி தொழில்நுட்பத் துறையில் பணியாற்ற வேண்டும் என்பதற்காக அத்துறை சார்ந்த கற்கைகளை கற்று ஒரு வருட அனுபவப் பயிற்சியும் பெற்றுக் கொண்டேன், தற்பொழுது குடும்பத்தினருடன் இணைந்து எங்களுடைய சுய தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம்.

**நேர்காணல்:**

**ஷிஹானா நௌபர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை



**03) சிறு வயது முதல் உங்களுக்கு எவ்வாறான விடயங்களில் ஈடுபாடு இருந்தது?**

சாதாரணமாக ஒரு பெண் குழந்தையை வளர்க்கும் போது, நடனம் இசை போன்றவற்றை கற்றுக் கொடுப்பார்கள். ஆனால் எங்களுடைய வீட்டில் வித்தியாசமாக கராட்டி, சிலம்பம், கத்தி சண்டை, வால் சண்டை மான் கொம்பு போன்றவற்றை கற்றுக்கொள்ள வழி அமைத்து தந்தார்கள்.

கராத்தேயில் மாவட்ட ரீதியில் முதலிடமும் யோகாவில் மாநிலத்தில் முதலிடமும் பெற்றுள்ளேன். பாடசாலை நாட்களில் விளையாட்டு துறையில் ஈடுபாடு அதிகம் கல்லூரி நாட்களில் கல்லூரியின் கபடி குழுவிலும் விளையாடி உள்ளேன்.

அத்துடன் நின்று விடவில்லை எனது தாய் என்னுடைய பொன்னான நேரத்தை வீணடிக்க விடவில்லை. தையல்,மருதாணி கலை போன்ற விடயங்களையும் கற்றுக் கொண்டேன்.

**04) புல்லட் பைக் ஓட்டுவதற்கான ஆர்வம் எவ்வாறு உருவானது?**

என்னுடைய தந்தை ஒரு லாரி டிரைவர் அவர் எனக்கு வாகனம் ஓட்ட கற்றுக் கொடுத்தார். கார் பைக் லாரி எல்லாம் என்னால் ஓட்ட முடியும். ஆரம்பத்தில் ரைடர்கள் பாவிக்கும் ஒரு பைக்கை தான் நான் ஓட்டினேன். ஆனால் எனக்கும் எனது தந்தைக்கும் புல்லட் என்றால் பிடிக்கும். என்பதால் நான் புல்லட் வாங்கி ஓட்ட ஆரம்பித்தேன்.

**05) Youtube Channel ஒன்றை ஆரம்பிப்பதற்கான என்னம் எவ்வாறு தோன்றியது.?**

தற்போது திருநெல்வேலியில் வசித்து வருகின்றேன். பாடல், நடன போட்டிகளில் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுள்ளேன். கராத்தே யோகா ஆகியவற்றிலும் மாவட்டம் மற்றும் மாநில ரீதியில் முதலாம் இடம் பெற்றுள்ளேன் இருந்தும் முறையான வழிகாட்டலும் பயிற்றுவிப்பாளர்களும் இல்லாமல் என்னால் அடுத்த கட்டத்திற்கு நகர முடியவில்லை. ஒலிம்பிக் போட்டிகளை பார்க்கும் போதெல்லாம் நானும் இது போன்ற ஒரு இடத்திற்கு சென்று இருக்க வேண்டும் என்று ஏங்குவதுண்டு. ஆனால் என்னிடம் திறமை இருந்தும் யாருக்கும் அது தெரியவில்லை. என்னுடைய திறமைகளை வெளி உலகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் தான் முதலில்






YouTube Channel ஆரம்பித்தேன். இதன் மூலம் பெற்றுக்கொள்ளும் வருமானத்தை வைத்து bright future Kindergarten என்னும் coaching centre ஆரம்பிக்கலாம் என நான் முடிவெடுத்தேன். எங்களுடைய ஊர்களில் இவ்வாறான coaching நிலையங்கள் இல்லை அவ்வாறு இருந்தாலும் அங்கு அறவிடும் பணத்தொகையை எல்லோராலும் செலுத்த முடியாது.

நான் நன்றாக பாடுவேன் ஆனால் என்னால் சூப்பர் சிங்கர் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியவில்லை ஏனென்றால். முறையான சங்கீதம் தெரியாது என்பதால் இது போன்ற பல விடயங்களில். என்னால் முன்வர முடியாமல் போய் உள்ளது. இந்த நிலை இன்னொருவருக்கு ஏற்படக்கூடாது என்று நினைத்தேன். இந்த Youtube மூலம் என் திறமைகளை வெளிப்படுத்தினேன்,அதற்கான சிறந்த வரவேற்பும் கிடைத்தது.

**06) கத்தார் நாட்டில் உங்களுக்கு கிடைத்த அனுபவங்களும் வரவேற்பும் எவ்வாறு இருந்தது?**

கத்தாரிக்கு வருகை தந்த ஆரம்ப காலப்பகுதிகளில் என்னை அவ்வளவாக யாருக்கும் தெரியாது. கொஞ்சம் கொஞ்சமாக youtube-க்கு வீடியோக்களை பதிவேற்றும் போது, ஒரு தமிழ் பெண் இங்கு இருக்கின்றார் என்று நிறையவே என்னை ஆதரித்து என்னுடைய YouTube channel ஐ subscribe செய்தனர். அதன் பிறகு என்னை யார் எங்கு கண்டாலும் உடனே வந்து பேசுவார்கள். selfie எடுக்க வேண்டும் என்பார்கள் எனது ஊரில் இருக்கும் போது இவ்வாறு நடப்பதை நான் ஒரு விடயமாக பார்த்ததில்லை, ஆனால் கடல் தாண்டி வந்த பிறகும் என்னை ஆதரிக்கின்றார்கள் என்று உணர்ந்த போது பெரும் மகிழ்ச்சி அடைந்தேன்.

**07) Bright Future Kindergarten பற்றி கூறுங்கள்.**

கொரோனா காலப்பகுதியிலேயே எனக்கு யோகா தெரியும் என்பதால் ஊரில் இருக்கும் சிறுவர்கள் எல்லாம் இணைத்துக்கொண்டு அவர்களை jogging அழைத்து செல்வேன். அவர்களுக்கு யோகா மற்றும் நிறைய பொது அறிவு விடயங்களை கற்றுக் கொடுப்பேன். அந்தக் காலப்பகுதியிலேயே நான் bright future kindergarten என்றே பெயர் வைத்திருந்தேன்.







இப்படியே இருக்க முடியாது என்ற முடிவில் தான் Youtube சேனல் ஆரம்பித்தேன். பின் கத்தாருக்கு வந்து விட்டேன். இருந்தும் நான் நாடு திரும்பியதும் அதற்குரிய முறையான நெறிமுறைகளுடன் ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பேன்.

எனது ஊரில் பலர் பீடி சுத்தும் வேலையை பார்க்கின்றனர். அதைக் குடிப்பவர்களை விட அதை தயாரிக்கும் போது பாதிப்புகள் ஏற்படுவது அதிகம் என்பது அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்றும் அவர்களுக்காக ஒரு வேலையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆசையும் எனக்கு உண்டு.

**08) உங்களுக்கு கிடைக்கப்பெற்ற விருதுகளைப் பற்றி கூறுங்கள்.**

யோகாவில் பால யோகமணி விருது, Best inspiration women விருது இரு தடவைகள் பெற்றுள்ளேன். அக்னி சிறகுகளில் இருந்து rocking kit விருது, இந்திய அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட நேரு யுவகேந்திரா எனும் விருது விழாவில் மங்கையர் மகுடம் 2023 இல் India's the best citizen in future ஆகிய விருதுகளை பெற்றுள்ளேன்.





**09) தற்போதைய இளம் யுவதிகளுக்கு நீங்கள் கூற நினைப்பது என்ன?**

சிறு வயது முதலே எனக்கு தொலைக்காட்சி பார்ப்பது போன்ற விடயங்களில் ஈடுபாடு இல்லை. எதையாவது புதிதாக கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் குறியாக இருப்பேன். அதேபோன்று என் பெற்றோர்களும் என்னை அப்படித்தான் வழி நடத்தினார்கள்.

எல்லோரும் அப்படி இருப்பார்கள் என்று கூற முடியாது. அவ்வாறான ஒரு சிலரும் காணப்படுகின்றனர். யாராக இருந்தாலும் தனக்கென ஒரு இலக்கை குறியாக வைத்திருக்க வேண்டும். அதன் மூலம் தாமாகவே அதை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

என்னை எடுத்துக் கொண்டால் bright future Kindergarten என்னிலிருந்து திறமையானவர்கள் வெளிவர வேண்டும் என்பது எனது ஆசை. என்னால் முடியவில்லை சென்றதை பிறருக்கு கொடுக்க வேண்டும். Youtube என்பது பெரிய விடயம் அல்ல. பலர் அதை பெரிதாக பொருட்படுத்துவதும் இல்லை. என்னுடன் selfie எடுக்கும் போது நானே இவ்வாறு எண்ணியதுண்டு. ஆனால் ஒரு இலக்கை நோக்கி பயணிக்க நான் அதை பயன்படுத்துகின்றேன். ஆகவே வாழ்க்கையில் ஒரு இலக்கை நோக்கி பயணியுங்கள்.







**10) உங்களைப் போன்ற வாழ்க்கையில் ஏதோ ஒரு விடயத்தில் சாதிக்க வேண்டும் என்று வரலாறு படைக்கத் துடிக்கும் வைர மங்கையர்களுக்கு களமமைத்து கொடுத்துக் கொண்டிருக்கும் துணிந்தெழு சஞ்சிகை பற்றிய உங்களுடைய அபிப்பிராயம் என்ன ?**

நீங்கள் என்னை தொடர்பு கொண்ட பின் துணிந்தெழு சஞ்சிகைகளை நான் பார்த்தேன். நீங்கள் அறிமுகப்படுத்தி இருக்கும் ஆளுமைகளை பார்த்து வியந்தேன். என்னையும் ஒரு ஆளுமையாக மதித்து என்னை வெளிக்கொண்டு வந்தமைக்கும் வாய்ப்பிற்கும் நன்றி. நான் இன்னும் சாதிக்க வேண்டியது நிறையவே உண்டு அந்த ஒரு தருணத்தில் நான் மீண்டும் துணிந்தெழு வாயிலாக வெளிவர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.



# பணம்- பத்தல்ல பல்லாயிரமும் செய்யும்

**ஹொரொவ்பொத்தான அ.இ.**

அமெரிக்காவில் ஒரு வங்கிக் கிளையினுள் நுழைகிறார் ஒரு மூதாட்டி. வங்கியினுள் வரிசையிற் காத்திருந்த அவர் தனது சந்தர்ப்பம் வந்ததும் அவர் தன் வங்கிக்கணக்கின் தரவு அட்டையை எதிரே உட்கார்ந்திருந்த பெண்ணிடம் நீட்டியவாறு 'தயவு செய்து என் கணக்கிலிருக்கும் 10 டொலர் பணத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள்'. என்று வினயமாகக் கேட்கிறார்.

அந்தப்பெண் வயதான இம்மூதாட்டியைச் சற்றும் பொருட்படுத்தாதவாறு ஓர் ஏளனச் சிரிப்போடு 'மன்னிக்கவும், 100 டொலருக்குக் குறைந்த தொகையை மீளப் பெறுவதாயின் வெளியில் இருக்கும் எங்கள் ஏரீஎம் இயந்திரத்தைப் பயன்படுத்துங்கள்...' எனச் சொல்கிறார்....

'என்னிடம் ஏரீஎம் அட்டை இல்லை அம்மணி..... எனக்குத் தேவைப்படும் பணத்தொகையினை இங்கு ஏன் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் அறிந்து கொள்ள முடியுமா..?

மிகவும் தாழ்மையுடன் கேட்கின்றார் அம்மூதாட்டி... கேட்டதுமே வங்கிப்பணிப்பெண் சற்று கோபத்துடனே.... மூதாட்டியின் வங்கித்தரவு அட்டையை மீள நீட்டியபடி..இது எங்கள் வங்கியின் ஒரு சட்டம்.ஏரீஎம் அட்டையொன்று இல்லையென்றால் அதைப்பெற்றுக் கொள்ளுங்கள். பின்னர் ஏரீஎம் இயந்திரத்தைப் பயன்படுத்தி பணத்தை மீளப்பெறுங்கள்...

என்று கடுகடுப்பாய்ச்சொன்னவள் என்னிடம் வேறு ஏதாவது அறிந்து கொள்ள வேண்டி இருக்கிறதா...? வழிவிடுங்கள் பின்னால் நிறையப்பேர் வரிசையிற் காத்திருக்கிறார்கள்.'

மூதாட்டியையும் அங்கு நடப்பதையும் பலர் பார்த்துக் கொண்டிருப்பதை மூதாட்டி காண்கிறார். சில நொடிகள் அங்கு அமைதியாக நின்றவர் தனது வங்கித் தரவு அட்டையினை அந்தப் பணிப்பெண்ணிடம் மீண்டும் நீட்டியவராக.... தயவுசெய்து என் கணக்கில் இருக்கும் முழுத்தொகை எவ்வளவு என்று என்னால் அறிந்து கொள்ளலாமா...?'

வேண்டாவெறுப்புடன் அட்டையை வாங்கி பரீட்சித்துப் பார்த்த அப்பணிப் பெண்ணின் கண்கள் ஆச்சரியத்துடன் விரிகின்றன......

பின் கோபம் தணிந்தவளாய்... பணிவான குரலில் கௌரவத்தோடு..... 'உங்கள் கணக்கில் மொத்தமாக 2000 பில்லியன் டொலர் பணம் இருக்கிறது மெடம்....'

வங்கியினுள் வரிசையில் நின்றோர் மட்டுமன்றி மற்றப்பணியாட்கள்கூட இதுகேட்டு சற்று அதிர்ந்தே விடுகின்றனர். வங்கி முழுதும் அமைதியில் ஆழ்கின்றது.

சரி.... அப்படியென்றால் தயவுசெய்து அதிலிருக்கின்ற மொத்தப் பணத்தையும் மீளப்பெறுவதற்கு எனக்கு உங்களால் உதவ முடியுமா.....? மூதாட்டி வங்கிப்பணிப் பெண்ணிடம் கேட்கின்றார்.

மன்னிக்கணும் மெடம்

இன்று காலையிலிருந்து இதுவரை இங்கு நடந்த கொடுக்கல் வாங்கல்களை வைத்துப் பார்க்கும்போது இந்தளவு பெரிய தொகைப் பணத்தை மீளெடுக்க இந்தக்கிளையில்



பணமிருக்க வாய்ப்பில்லை என நினைக்கிறேன் மெடம்.... எங்கள் முகாமையாளரை சந்தித்துப் பேச ஏற்பாடு செய்து தருகிறேன்.

அவருடன் பேசிவிட்டு நாளைக்கு வாருங்கள் மெடம்.....நாங்கள் முழுத் தொகையையும் தயார்செய்து வைக்கின்றோம்.....' என்கின்றாள் இருக்கையைவிட்டு எழுந்துநின்றவண்ணம்.

சற்று யோசித்த மூதாட்டி........ எனக்கு இப்போது இங்கு எவ்வளவு பணம் உங்களால் தர இயலும்.....?' இப்போதைக்கு இங்கு உங்களுக்கு 2000 டொலர் வரை எந்தத் தொகையானாலும் பெற்றுக் கொள்ளலாம் மெடம்....'

நல்லது.... தயவுசெய்து எனக்கு இப்போது 2000 டொலர் பணம் தாருங்கள்.' அந்தப்பெண்ணும் உரிய படிமுறைகளை மிகக் கெதியாக முடித்துவிட்டு மிக்க மரியாதையுடனும்

பணிவோடும் 2000 டொலர் பணத்தை புன்முறுவலுடன் மூதாட்டியிடம் தன் இருகரங்களினாலும் கொடுக்கின்றாள்....

மூதாட்டி தன் பணப்பையை எடுத்து அதைத்திறந்து பெற்ற பணத்தில் 10 டொலரை பணப்பையினுள் வைத்துவிட்டு மீதமாயிருந்த1990 டொலர் பணத்தை வங்கிப்பணிப் பெண்ணிடம் மீண்டும் கொடுத்து

கேட்கின்றார்....
இதில் இருக்கும்1 990 டொலர் பணத்தை தயவுசெய்து என் வங்கிக் கணக்கில்

வைப்பிலிடுவீர்களா.....?'
வங்கிப்பணிப்பெண் அதைப்பெற்று வைப்பிலிடுகின்றாள்.........

இதில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் எத்தனையோ உள்ளனவே.... தோற்றத்தை வைத்து மனிதர்களை மதிப்பிடுதல்

சட்டம், ஒழுங்கு,தொழிநுட்பக்கோளாறு எனச்சொல்லி வயதானவர்களை நோகடித்தல், அலைக்கழித்தல்,காரணஞ்சொல்லல் மற்றும், அவர்களுடன் விவாதித்தல், பணத்துக்குக் கொடுக்கும் மரியாதையிற் சிறிதேனும் மனிதனுக்கும் கொடுத்தல்,

அவ்வளவு பணத்தை வைத்திருந்தும் மூதாட்டியின் அடக்கமும் நடந்து கொண்ட விதமும் அணுகுமுறையும், அதிகாரத்திலிருப்போரின் அசிரத்தை என்று இன்னும் எத்தனை எத்தனையோ.....இல்லையா?







sky தமிழ்
AWARDS
QATAR
-2023-
இலங்கை மற்றும் இந்திய கத்தார் வாழ்
ஆளுமைகளை கௌரவிக்கும்
ஸ்கை தமிழ் விருது – 2023
DATE : 30TH NOVEMBER 2023
VENUE : Ashoka Hall , Indian Cultural Center – Doha
துணிந்தெழு
Sky Tamil Media Network (Pvt) Ltd